உ

தாயுமானுர் திருவாய்மலர்ந்தருளிய

சமய சமரச

# நன்னிலைத் தீர்ப்பு

என்னும்

# அரிய பெரிய ஒரு திருப்பாடலின் உரை.

---

திருவொற்றியூரான்

வேத மொழிபெயர்ப்புக் காரியாலய வெளியீடு,

சூளை, சென்னை.

வெளியீடு நெ. 7. 1936 நன்கொடை.

# முன்னுரை.

*அனைத்துமாய் நின்றாயே யான்வேறா நின்னை*
*நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே.*

ஆன்ம நேயர்களே !

கடவுள், பூவண்ணம் பூவின்மணம் போன்று, மெய்ப் போதவின்பமாய் நிறைந்து நிற்கின்ற அறிவான தெய்வமா மெனல் எம்மதத்தார்கட்கும் சம்மதமா மென்பது சமய கோடிகளாகிய பேய்களாற் பிடிபடாத தூயவுள்ளத்தவர்க ளுக்கு இனிது விளங்கும்.

அத்தகைய, தத்துவங்கடந்த தனி முதற்பொருளாகிய தெய்வம், மனக்கோளையே நிமித்தமாகக் கொண்ட நூறு நூறாயிர மியல்புடையதாய் எண்ணிறந்தபெயர், உரு, பூசனை யமைவுகளை, ஏற்ற ஏற்றுக்கொண்டு, சமயகோடிகளால வழுக் கிடுவதற்குங் காரணமாயிருக்கின்ற தென்பதையும் உலக மறியும்.

மற்றும், அறிவுடையார்களும், பெரியார்களும், ஆசிரிய மார்களும், ஆராய்ச்சிமிக்கார்களும், "எல்லார்க்கும் பல்வி சொல்லுமாம் காடிப்பானையில் விழுமாம்" என்ற முதுமொழிப்

படி சமயப்படுகுழியில் விழுந்து மயங்கினார்கள் என்பது, அவரவர்களின் கொள்கை வேறுபாட்டாலும், தெய்வ நிந்தையாலும், பிற மதங்களைப் பழித்துத் தம்மதத்தை நிறுவும் வகையாலும் புலனாம்.

ஆனால், அவரவர்களின் உள்ளக்கருத்தை உற்றுநோக்கின், மயங்கினாரென்பதும், மயங்கிவீழ்ந்தாரென்பதும், மயங்கித்தெளிந்தாரென்பதும் தெற்றென விளங்கும்.

இதற்கு எடுத்துக்காட்டாக நமது தாயுமானவரையே எடுத்துக் கொள்ளுவோம், இவரது திருப்பாடல்களுள் பொதுவாய்ச் சிலவற்றை யெடுத்து நோக்கின், துவிதம் அத்துவிதம் நிர்க்குணம், சகுணம், வேதாந்தம், சித்தாந்தம், சமயம், சமயாதீதம், என்பது முதலியன கலந்து கிடக்கின்றனவே யன்றி, இதுவே அவரது கொள்கை யென்று வரையறுப்பதற்கு இடமில்லை. யாண்டேனும் ஒரு பாட்டில் ஒரு சொல்லை மாத்திரம் எடுத்துக்கொண்டு கதறித்திரியும் மதப் பேய் பிடித்தவர்க்கு, அப்பேய் நீங்க, சன்மார்க்க சுத்தசமரச நிலையாகிய திருநீறு எப்போது கிடைக்குமோ, என்று இராமலிங்கப் பெருமானார், இரங்கி இரங்கிக்கூறிய பெருவிண்ணப்பம் முதலியனவும் ஈண்டுக் கவனித்தற்குரியன.

இனி, தாயுமானார், உலகில் பல்வகைச் சமயகோடிகளின் போர் பெரிதாயிருப்பினும், அப்போர்களுக்கெல்லாம் காரணமாயிருப்பது ; வேதாந்தம், சித்தாந்தமென்னும், அத்துவித, துவிதமதச்சண்டையேயா மென்பதை மனத்துட்கொண்டு

அப்போரை மாற்ற, தமது கடைசி முடிவுரையாக ஒரு அரிய பெரிய பாடலைத் தமது நூலின்கண் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்; என்பதை எடுத்துக் காட்டுவதற்கு மாத்திரம் யாம் எழுந்தேமன்றி, மதப்பேய் பிடித்து ஆடுவோர்களுடன் ஆடுவதற்கு முன்வந்தேமல்லேம் என்பதை அறிஞர் பலர்க்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றனம்.

மற்றும், யாமும், பல்வகைச் சமயங்களின் கொள்கைகளையும், நூல்களையும், பெரியார்களையும், பல்வகையானும், கற்றும், கேட்டும், அணுகிப்பார்த்தும், போரிட்டும் உழன்று தெளிந்து இதைத் துணிந்துரைக்கின்றோமென்பதையும், இந்நூலார் கூறியபடி, ஞான முக்கியமெனின், கருமமே முக்கியமென்று நாட்டவும், கரும முக்கியமெனின், பழைய ஞானமே முக்கியமென்று நாட்டவும், வடமொழிபுகலில், தென் மொழியிலும், தென்மொழி புகன்றிடில் வடமொழியிலும், எவரையும் வெல்லாமல் மருட்டும் ஆற்றலுடையோமாயினும், சமரச நன்னிலையே பேரின்பந்தரும் இந்நிலையென உறுதிப் பட்டுள்ளோம் என்பதையும் வினயத்துடன் அறிவுறுத்துக் கொள்ளுகின்றோம்.

அற்றுகளினன்றே, இப்பெரியார், சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து, சமயங்கடந்த மோனசமரசம் வகுத்து, என்றிசைத்துவிட்டு, சமயாதீதப் பழம்பொருளை, என விதந்தோதியருளினர் என்க.

இவர் அநுபவச் செல்வராய், சமயாதீதநிலை கைவரப் பெற்று நிருவிகற்ப நிட்டையி லழுந்தியவரேனும், உலக நன்மையின் பொருட்டே சமயங்களையுஞ் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றின் சமரச நிலையையே முடிவாய்க் கூறியருளினர்.

தாயுமானார் சமயங்கட்குக் கட்டுப்பட்டிருப்பரேல், சாதியிலே சமயநெறிகளிலே சாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச் சண்டைகளிலே, ஆதியிலே யபிமானித் துழல்கின்ற உலகரில் இவரும் ஒருவராய், அலைந்தலைந்து வீணாய்ப்பிறந்துழல் பவராகாரன்றோ, ஆதலின் சமயப்பற்றுளார் பிடித்ததைத்தே தாபிக்கும் பேராணவமுடையார்களெனக்கருதி அவ்வாணவத்தை யடித்துத் துரத்துவதற்கே சமயக் கோட்பாட்டைத் தழுவி சமரசநிலையைத் தீர்ப்புச் செய்தருளாநின்றார்.

இவ்விரண்டு மதங்களும், ஒன்றையொன்று தழுவி, கருவியும் பயனுமாய் நிற்குந்தன்மையால் ஒன்றையொன்று அவாவிநிற்பதையும், ஒன்று, இரண்டு, என்னும் வழக்கு, ஒன்றாகவேயாயினும், இரண்டாகவேயாயினும் இருக்கின்றாதென்பதையுமுணர்க. இது இருள், ஒளி என்னும் வழக்குப்போல் என்பதாம்.

ஈண்டு, சமரசம் என்று கூறியது, இரண்டு மதங்களும் ஒரு நிலைமையையே யுடையதாதலின், என்னும் ஐயப்பாட்டையும், கருவியும் பயனுமாய்க்கொள்ளுவதை மாறாகக்கூறிற் படுமிழுக்கென்னை? என்னும் ஆசங்கையை நீக்குதற்கும், ' ஓதரிய துவிதமே,' எனத் தேற்றேகாரங்கூறி வரையறுத்தருளினர்.

பாலும், நீரும்போன்றுள்ள ஒற்றுமைச்சம்பந்தத்திற்குத், துவிதம் காரணமாகாமையின், நீரும் நீரும் ஒன்றுதல் போன்றுள்ள அத்துவித நிலையே ஈண்டு அத்துவிதமென்பதாம். பிறவெனின்? உபயவாதிகள் என்னுஞ் சொல் அமையாதென்பதும் உணரற்பாலது.

அற்றேல், துவிதநிலையும், அத்துவிதநிலையும் தம்முள் முரண்பட்டனவாமாதலின் இவ்விரண்டையும் ஒருவன் ஒழுகிப் பயனடைந்துய்த்தல் எவ்வாறுமெனின்? அற்றன்று, இதுகாறும் கூறிவந்ததும், தாயுமானவரின் திருவாக்கையெடுத்துக்காட்டியதும் இத்தகைய மாறுபாடு ஒழிவதற்கேயாம் என்க. என்னை? துவிதத்தையும், அத்துவிதத்தையும், இரண்டும் பயனென்றுவது, அல்லது, சாதனமென்றுவது கொள்ளின் கூறியவாங்கு முரணுறும், ஈண்டு அங்ஙனமன்று; மற்றென்னின்? இப்பிறவியிலேனும், முற்பிறப்பிலேனும் துவிதபாவனை நன்கு முற்றுப்பெற்றார்க்கே அத்துவிதமெய்யுணர்வு இனிது தோன்றுமென்பதே துணிபாமாதலினென்க. இதுபற்றியே, சுகர் முதலியோர்களைப் போன்றார்க்கு உதிக்குங் காலத்திலேயே அத்துவித ஞானந் தோன்றியது கொண்டு முற்பிறப்பில் அவர் துவிதவுபாசனை கைவந்திடப் பெற்றவர் என யூகிப்பதூஉமென்க.

இதனால், எல்லாவிதமான சமயங்களும், நூல்களும், ஆன்றோர்களும், மற்றுமுள்ள பல்வகை நெறிகளும், சரியை கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கையுங் கூறி, ஞானத்

தாலேயே வீடென்று கூறுமேயன்றி மாறு கூறா. மாறு கூறு கின்றனபோற் றோன்றினும், தாயுமானுரின் தீர்ப்பே அதற் குங் கருத்தாமென உற்றுநோக்கி, சமரசநிலையில் அன்பு பூண் டொழுகிப் பேரின்பத்தை யடைந்து உய்யுமாறு கடவுளைப் போற்றுகின்றனம்.

ஆணவத்தோ டத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவிதஞ் சாரும் நாள் எந்நாளோ.

சமரச நன்னிலை தழைத்தோங்குக !

வேத மொழிபெயர்ப்பாசிரியர்
காசிவாசி-சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

எங்கும் நிறைகின்ற பொருள்

தாயுமானவர் அருளிய

சமரச நன்னிலைத் தீர்ப்பாகிய

# திருப்பாடல்.

---

வேதமுடன் ஆகம புராணம் இதிகாச முதல்
வேறும் உள கலைகள் எல்லாம்
மிக்காக அத்துவித துவித மார்க்கத்தையே
விரிவா எடுத்து உரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டு பணும் ஞானம் ஆகும்
உண்மை அநுபவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வும் ஈது
உபய வாதிகள் சம்மதம்
ஆதலின் எனக்கு இனிச் சரியை ஆதிகள் போதும்
இயாது ஒன்று பாவிக்க நான்
அது ஆதலால் உன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்கம் உறல் ஆம்
ஏது பாவித்திடினும் அது ஆகி வந்து அருள் செய்
எந்தை நீ குறையும் உண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே.

என்னும் இப்பாடல், தாயுமானர் அருளிய நூலின்கண் எழும் ஐயப்பாடுகளைப் போக்கி, அவர், எம்மதத்தர், எம்மதத்

தர் என்று பறையடிக்கும் பேதமையை நீக்கி, வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையாகிய சுத்தசன்மார்க்கப் பெரியாரென விளக்கி, மதிமயக்கை யறுத்தற் பொருட்டு முடிவு கூற எழுந்ததாமென்பது உணரற்பாலது.

## இப்பாடலின் விரிவுரை.

அங்கு, இங்கு, என்று கூறுதலற்று, எங்கும் பேரொளியாய், ஆனந்த நிறைவாய், அருள் வெளியாய், தனது நினைவு மாத்திரத்தால் அண்டகோடிகளாய், உயிர்க்குயிராய், மனவாக்குக் கெட்டாததாய், சமய கோடிகள், எமது தெய்வம், எமது தெய்வமென்று வழக்கிடவு நிற்பதாய், பெரிய மௌனத்தின் வைப்பாய், பெரும் பொருளாய், அத்துவிதப் பொருளாய் இருந்தும், பல கோடி உருக்கொண்டு பல்லாயிரம் பெயர்களால் போற்றப் பெற்றருளி, உயிர்க்குயிராயிராநின்ற தத்துவங்கடந்த தனி முதற் பொருளே! அடியேற்கு, இனிமேல் அதாவது சமய மயக்கு ஒழிந்த பின்னர், அரும்பு, மலர், காய், கனி போன்றுள்ள, சரியை, கிரியை, யோகம், முதலிய என்பவைகள் கைவரப் பெறின் போதியவைகளாம். இதையே எனக்கு அளித்தருள வேண்டுமென்பது இவரது விண்ணப்பமாம்.

அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் முதலிய வழிகள் பலவிருக்க, அவற்றை விழையாது, மனத்தூய்மைக்குக் காரணமாகிய சரியை முதலியவைகளை மாத்திரம் வேண்டியதென்னையோவெனின்? அவைகள் மனத்தையே காரணமாகக் கொண்டெழும் பாவனையின் வயத்தனவாத

வின் அவைகளை எளிதிற் பெறற்கூடும். அவ்வனைத்திற்கும் காரணமான கருமயோக முதலியவைகளே கிடைத்தற்கரியவைகளா மாதலினென்க.

அற்றேல், அத்துவிதம் முதலிய பாவனைகளானது எவ்வாற்றால் மிக எளியவைகளாமெனின்? தெரிக்குதும்:—

யார், யார், எதை, எதை, எவ்வாறு, எவ்வாறு பாவிக்கின்றாரோ, அவரவர் அது வதுவே ஆகின்றாரென்பது யாண்டும் ஒப்ப முடிந்ததாம்.

ஆதலின், யான், எதைப் பாவிக்கின்றேனோ, அதுவே யாவேனாதலால், அத்துவிதத்தைப் பாவிக்கில் அத்துவிதமாவேன். துவிதத்தைப் பாவிக்கில் துவிதமாவேன் என்க. மனதிற்கு, சித்தைச் சேரில் சித்தாந் தன்மையும், சடத்தைச் சேரில் சடமாந் தன்மையும் அமையுமாதலின் அது பொருந்துமாறுணர்க.

அற்றேலஃதாகுக, உனக்கும், எனக்கும், அத்துவித பாவனையும், துவிதபாவனையும் எவ்வாற்றாலாமெனின்? கேட்குதி—உன்னை, நானே யென்று பாவனை செய்யின் இரண்டற்ற அத்துவிதமாய் நிலைக்கின்றேன். உன்னை, எனது இறைவனாகத் துவிதமாய்ப் பாவிக்கிலும் அத்தகைய இறைவனெழுந்தருளி எனக்கு அருள் புரிகின்றனை என்னுமிவ்வாற்றாலென்க.

இவ்வாறு, எவ்வண்ணம் பாவிக்கினும் அவ்வண்ணமாக வந்து அருள் செய்கின்ற எந்தையாம் நீ, யானாகவும் எனக் கன்னியமாகவும் இருக்குமிடத்து, அத்துவிதத்தையேனும் துவிதத்தையேனும் யான் அடைந்திலேனே என்னும் குறைவுபாடு எனக்குச் சிறிதுமில்லை யென்பதாம்.

ஈண்டு, அத்துவிதம், துவிதம், ஒன்று, இரண்டு, பந்தம் வீடு, ஞானி, அஞ்ஞானி, என்பது முதலிய வழக்குகளனைத்தும் மனத்தின் வரம்புட்குட்பட்டதாய வாய்ப்பிதற்றுகள் என்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

இதனால், "அதுவிது வென்றும், அவன் நானே யென்றும், அதுநீயே யாகின்றாயென்றும், அதுவானேன் என்றும் தமையுணர்ந்தார் எல்லாம் இரண்டாக ஒன்றாகச் சொல்வாரோ வுற்று" என்றும் பிறவும் இவ்வாசிரியர் குறிப்பித்தமையும் உணரற்பாலது.

அற்றேலஃதாகுக. ஈண்டு, அத்துவிதம், துவிதம், என்பதற்குப் பொருள் யாதோவெனின்? இருமையற்றது, இருமையுடையது என்பது பொருளாம். இரண்டலாதது முதலிய பொருள்களைக் கொள்ளில் அமையாதோ வெனின்? மதச்சார்பு பற்றிக் கொள்ளினும் ஈண்டு, உபயவாதிகள் என்று அத்துவிதியையும், துவிதியையும் வேறு பிரித்தலின் ஈண்டைக்கு அது இயைபுடையதன்றென்றுணர்க.

அற்றேல், விசிட்டாத்துவிதம், சூனியம் முதலிய மதக்கோட்பாடுகளுமிருக்க, இவ்விரண்டை மாத்திரம் ஆசிரியர் தாயுமானார் எடுத்துச்சமாசப்படுத்தல் என்னை யெனின்?

இவ்விரண்டு கொள்கைகளையே, மறைகளும், புராணங்களும், இதிகாசங்களும், ஏனைய தத்துவ சாத்திரங்களனைத்தும், அத்துவிதமாகவும், துவிதமாகவும் பரக்கக் கூறுகின்றன, ஆதலினென்க.

அற்றேல், அத்துவிதத்தையே கூறுகின்றனவென்று ஒரு சாராரும், துவிதத்தையே கூறுகின்றனவென்று மற்றொருசாராரும் வாய்ப்பறை யடித்தல் எற்றுக்கோவெனின்? இவ்வாறு ஓதலும் உணர்த்தலும் உணவு சுட்டியே, சாதலும் பிறத்தலுந் தவிர்க்கவல்ல வென்றுணர்க.

மற்றெவ்வாறு கொள்ளில் நலமெனின்? துவிதத்தைப்பற்றி நின்று வழிபட்டு, அவ்வழிபாட்டின் முடிவில் உலகனைத்தும் வழிபடு கடவுண்மயமாய்த் தோற்றில், அதன் முடிவாய் வினுவிடையற்ற அத்துவிதநிலை இனிது திகழுமென்று கொள்ளலே நூல்மரபும் பெரியார் துணிபும் சாதல் பிறத்தலைத் தவிர்க்க யெடுத்துக் கொண்ட முயற்சியுமாம் என்பது இரகசியம்.

அற்றேலஃதாகுக. துவிதமும் அத்துவிதமும் எல்லார்க்குங் கொள்ளற்பாலனவா மாதலின் அத்துவிதமே துவிதத்திற்கு வழியதா மெனின் இழுக்கென்னை யெனின்? சிந்தையுமனமுஞ் செல்லா நிலைமைத்தாகிய பாவீட்டின்கண் அதாவது முத்தியிலும் இரண்டு உண்டென்றல் யுக்திக்கும், அனுபவத்திற்கும், வசனத்திற்கும் பொருத்தமற்றதென்றொழிக. இனி, மற்று எவ்வாறு கூறின் பொருந்துமெ

னின்? வழிபாடும், வழிபடுவதும், வழிபடுவோனும் அல்லது, சிந்திப்பான், சிந்தனை, சிந்திக்கப்படுவது முதலிய பலவகையான துவித நெறிகளே வழிபாடு முதிர்ந்தவிடத்து மும்மை நீங்கி இருமையாய், இருமை நீங்கி ஒருமையாய், ஒருமையும் நீங்கி, தானே தானாய் நிலைத்திருக்கின்ற அத்துவித நிலையாகும் என்னும் இதுவேயாம்.

இந்நிலை, சந்திரன் இரண்டென்னும் தோற்றம்பற்றி ஒன்றேயென்றும்; அலை, நுரை, குமிழி முதலிய இருமைத் தோற்றங்கொண்டு ஆயுழி, நீர் ஒன்றேயென்றும்; பூடணம், பொன் என்னும் இருமை ஞானங்கொண்டு நோக்குமிடத்து பொன் ஒன்றென்னும் ஞானமும், கர்னனும், குந்தி மைந்தனும் இருவர் என்று தோன்றியபின்னர் கர்ணனே குந்தி புத்திரனென்று உணர்ச்சியுமுண்டாவதுபோன்று, உலகை ஆக்கி, காத்து, அழிக்குங் கடவுள் மூவரென, முன்னுணர்ந்து, அம்மூவரும், படைத்தளித்தழிக்க வந்த ஒரு பெரும்பொருளின் கற்பிதவடிவர்களென்றுணர்ந்த பின்னர், கடவுளே எல்லா வுலகாய் நிற்றலின் ஒரு பொருளே யென்னும் உணர்ச்சி தோன்றுகின்றது என்னும் கருதலளவைக்கும், அதாவது யுக்திக்கும் ஒத்ததாம்.

மற்றும், இதுவே, கனவில், காண்பானும் காணப்படுபொருளும், காண்டலும், ஆன்மாவாகிய நம்மைத்தவிர வேறொன்றும் ஆண்டு அநுபவிக்கப்படாமையானும், நனவில், பிறிதோர், பொருளின் கூட்டுறவாலும், அடைவாலும், உணர்வாலும், கேள்வியாலும், மற்றும் பலவகையானும் நமக்

குத் தோன்றும் இன்பத்தைவிட, துயிலுங்கால் பொருட் சார்பு ஒரு சிறிது மில்லாது உண்டாகும் சிறந்த ஆனந்தம் அத்துவிதத்திலெழுவதையும், நாம் அநுபவிக்கின்றோமாதலானும், ஆன்றோர்களின் அநுபவத்திற்கும் ஒத்ததாம்.

மற்றும், இது, 'சென்றுசென் றொன்றாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்' 'பாவனையாய கருத்தினில் வந்த பராவமுதாகாது', 'யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலைநின்றது தற்பரம்' பேசாவனுபூதி பிறந்தது, 'அறிவொன்றற நின்று, அறிவால் அறிவில் பிரிவொன்றற நின்ற பிரான்' 'ஆதாரம் ஆதேயமுழுதும் நீ.' 'அதுவென்றால் எதுவெனவொன்றடுக்குஞ் சங்கை' 'ஆதலினாலதுவெனவும் அறிவை விட்டு, கண்டனவல்லவென்றே கழித்திடும் இறுதிக்கண்ணே, கொண்டது பரமானந்தம்', 'தெய்வம் வேறுளதென்பர் சிந்தனை நைவர் உனைச்சார்ந்தவர் உய்வர். மாதவர்க்கிரண்டற்றோங்கும்,' 'ஞானமே முடிவார் தேடுவார் தேடும்நாட்டமே,' 'எனதென்பதும் பொய், யானெனல் பொய் எல்லாமிறந்த விடங்காட்டும் நினதென்பதும் பொய், நீயெனல் பொய், என நிற்கு நிலைக்கே நேசித்தேன்.' என்பன முதலியனவாக எழுந்த உண்மை வாக்குகட்கும் ஒத்ததாம் என்பது உறுதிப்பட்டமை காண்க.

கூறிப்போந்தவாற்றால் பெறப்பட்டதாகிய அத்துவித நிலைக்கு, துவிதநிலை கருவியாமென்னும் இந்நிலையே இரண்டு வாதிகளுக்கும் சம்மதமாம். இத்தகைய அநுபூதிச் செல்வராகிய தாயுமானாரது அருள்வாக்குச் சம்மதமன்றெனில்?

இருவரும் தத்தமது சமயகுரவர்க்கு மாணவர்களாகாமல், பிற மதத்தார்களுக்கு நட்புடையராய், பிறநாட்டுக் கொள்கைக்கு வாயைத் திறந்துகொண்டிருப்பவர்களுமாகி, பல்லாற்றானும் இடர்ப்படுவரென்பது குறிப்பாற் கொள்ளக்கிடந்தமை காண்க.

அற்றாகலினன்றே, கண்ணுவாரேனும் நினைக்கைகுவியாராயின் அந்த மண்ணுவார் நட்டைப மதியேன், என்றும், நானென்று ஒருமுதல் உண்டென்ற நான் தலைநாண என்னுள், தான் என்று ஒரு முதல் பூரணமாகத் தலைப்பட்டது, எனவும், "அத்துவிதம் பெறும்பேறென்றறியாமல் யான் எனும் பேயகந்தையோடு, மத்தமதியினர்போல மனங்கிடப்ப இன்னம் இன்னம் வருந்துவேனோ" எனவும் இரண்டையுந் தழுவியே தாயுமானார் இரங்கிக் கூறிய நூலமென்பதைக் கடைப் பிடித்தொழுக.

தர்க்கமிட்டுப் பாழாஞ்சமயர்க் குதர்க்கம் விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ.

சமரச நன்னிலை தழைத்தோங்குக.

---

PRINTED AT THE EVEREADY PRESS, CHOOLAI, MADRAS.